*10*

# நன்கு சமானப்படுத்தப்பட்ட வாழ்வு

## (அதிகாரம் 13)

எபிரெயருக்கு எழுதிய நிருபத்தை எழுதியவர் தமது நிருபத்தை ஏறக்குறைய முடித்திருக்கும் நிலையைக் கற்பனை செய்துகொள்ளுங்கள். அவர் தாம் கூற விரும்பிய உபதேசக் கருத்துக்கள் பெரும்பான்மையானவற்றைக் கூறியிருந்தார் மற்றும் தமது வாசகர்களை விசுவாச விலக்கத்திற்கு எதிராக எச்சரித்திருந்தார். கடைசியில் அவர் தம்மைத் தாமே, "நான் எவ்வாறு இந்த நிருபத்தை முடிப்பது?" என்று கேட்டிருக்க வேண்டும். அவர், "இந்த சகோதரர்கள் அன்றாடம் கிறிஸ்துவுக்காக வாழ்வதில் உதவி செய்யும் நடைமுறை அறிவுரைகள் சிலவற்றைக் கொடுப்பேன்" என்று முடிவு செய்தார். புதிய ஏற்பாட்டின் மற்ற பல நிருபங்களைப் போன்றே இந்த நிருபமும், நடைமுறை புத்திகூறுதல்களுடன் முடிவடைகிறது. இந்தப் புத்திமதிகள், நன்கு சமானப்படுத்தப்பட்ட ஆவிக்குரிய வாழ்வை வாழ்வது எவ்வாறு என்பதற்கு ஆலோசனைகளை அவர்களுக்கு முன்வைப்பதாக நாம் நோக்க முடிகிற, கிறிஸ்தவ வாழ்வின் பல்வேறு பகுதிகளை எடுத்துரைக்கும் புத்திமதிகளாக உள்ளன.

நன்கு சமானப்படுத்தப்பட்ட வாழ்வை நடத்துவதற்கான தேவையை நாம் புரிந்துகொள்ள முடியும். உதாரணமாக நாம், அந்த வேலை நல்லதாக உள்ளது என்று அறிகிறோம். இருப்பினும் நாம், தங்கள் வேலைகளுக்கு அடிமையாக இருக்கிற "வேலைப் போதைக்காரர்கள்" சிலரைக் கண்டிருக்கலாம், அவர்கள் ஒரு வாரத்திற்கு எழுபது அல்லது எண்பது மணி நேரம் வேலை செய்து, மற்ற எல்லாவற்றையும் புறக்கணிப்பவர்களாக இருக்கின்றனர். மற்றவர்கள் தங்கள் பொழுதுபோக்குப் பணிகள் அல்லது விளையாட்டுகள் அல்லது உடல் பயிற்சிகள் ஆகியவற்றை அதிகமாகச் செய்கின்றனர். இந்த மக்கள் யாவரும், அதிகம் சமானப்படுத்தப்பட்ட வாழ்வை - எடுத்துக்காட்டாக, தங்கள் குடும்பத்தினருடன் அதிகமான நேரம் செலவிடுதலை - நடத்தும்படி ஊக்குவிக்கப்பட வேண்டியது அவசியமாக உள்ளது.

ஆவிக்குரிய வகையில் நன்கு சமானப்படுத்தப்பட்ட வாழ்வை நடத்தவும் நமக்கு ஊக்குவித்தல் தேவைப்படலாம். ஒரு கிறிஸ்தவர், மற்ற கொள்கைகளைப் புறக்கணிப்பதற்கு கிறிஸ்தவத்தின் ஒன்றிரண்டு கொள்கைகள் மீது கவனம் குவிப்பவராகக் கூடும். சபையின் சில உறுப்பினர்கள், தவறுக்கு எதிராகப் பேசவும் சத்தியத்தை மேம்படுத்தவும் ஆவல் உள்ளவர்களாக இருக்கலாம், ஆனால் அவர்கள் அன்பையும் கிருபையையும் புறக்கணித்து இருக்கலாம். குறிப்பிட்ட சகோதரர்கள் தூய்மை மற்றும் ஒழுக்கவீனமான நடைமுறைகளுக்கு எதிராகத் தொடர்ந்து எச்சரித்தல் பற்றி அக்கறையாக இருக்கலாம்; மற்றவர்கள்

கிறிஸ்தவ அன்பில் முதன்மை ஆர்வம் கொண்டவர்களாக இருக்கலாம். சில சகோதரர்கள், ஆராதனை என்ற பாடக்கருத்தில் உற்சாகம் உள்ளவர்களாக இருக்கும் வேளையில், மற்றவர்கள், உபகாரம் மற்றும் பிறருக்கு நன்மை செய்தல் ஆகியவற்றின் மீது கவனத்தைத் திருப்பி இருக்கலாம். ஒரு சிலர், சுவிசேஷ ஊழியம் அல்லது வெளியில் சுவிசேஷப் பணி செய்தல் ஆகியவற்றில் ஈடுபட விரும்பலாம்.

சபையின் எல்லா அக்கறைகளும் நல்லவைகளாக உள்ளன மற்றும் அவைகள் எல்லாமுமே வலியுறுத்தப்பட வேண்டும். ஒரு நபரின் திறன்கள் அவரை மற்ற ஆர்வங்களைக் காட்டிலும் ஒரு ஆர்வத்தை நோக்கி அதிகமாகத் திருப்பும் வேளையில், நன்கு சமானப்படுத்தப்பட்ட கிறிஸ்தவரின் வாழ்வு, பலவகையான நெறிமுறைகள் மற்றும் நற்செயல்களை உள்ளடக்கும். நாம் ஆவிக்குரிய வகையில் நன்கு சமானப்படுத்தப்பட்ட வாழ்வை நடத்துவது அவசியமாக உள்ளது, மற்றும் நாம் எவ்வாறு அதைச் செய்ய முடியும் என்பதை எபிரெயர் 13ம் அதிகாரம் நமக்குக் கூறுகிறது. அப்படிப்பட்ட வாழ்வின் பண்புகளைப்பற்றி நாம் ஆழ்ந்து சிந்திப்போமாக.

## அன்பின் வாழ்வு

*முதலாவதாக, நன்கு சமானப்படுத்தப்பட்ட வாழ்வு என்பது அன்பின் வாழ்வாக,* விசேஷமாக சகோதரர்கள் மீது அன்புடைய வாழ்வாக *உள்ளது.* (எபிரெயர் 13:1-3ஐ வாசிக்கவும்.) 13ம் அதிகாரம் பொதுவான ஒரு கூற்றுடன் தொடங்குகிறது: "சகோதர சிநேகம் நிலைத்திருக்கக்கடவது." இந்தக் கிறிஸ்தவர்கள் நிச்சயமற்ற எதிர்காலத்தை எதிர்கொண்டிருக்கையில், துன்புறுத்தப்படுதல் மற்றும் விசுவாச விலக்கம் என்ற இரு விஷயங்களின் அபாயத்தில் இருக்கையில், அவர்கள் ஒருவர் மற்றவர்மீது ஊக்கமான அன்பு கூறுதலைத் தொடருதல் அவசியமாக இருந்தது! அவர்கள் ஏற்கனவே சகோதர சிநேகத்தைக் கொண்டிருந்தனர்; அவர்கள் அதைக் காத்துக்கொள்வது அவசியமாக இருந்தது, ஒருவேளை அதை தங்கள் வாழ்வில் இன்னும் அதிகம் ஏற்புடையதாக்க வேண்டியிருந்தது. நாம் ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள அன்பைக் காத்துக்கொள்ள வேண்டும். அது தொடருவதையும் ஒருவர் மற்றவருடனான நடவடிக்கைகளில் அது செயல்விளக்கப் படுத்தப்படுதலையும் நாம் நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டும்.

அடுத்ததாக, சகோதர அன்பின் குறிப்பான இரண்டு வெளிப்படுத்துதல்கள் தரப்பட்டுள்ளன:

(1) "அந்நியரை உபசரிக்க மறவாதிருங்கள்." முதல் நூற்றாண்டுக் கிறிஸ்தவர்கள் பயணம் செய்த போது, அவர்கள் மற்ற கிறிஸ்தவர்களின் இல்லங்களைத் தவிர, தங்குவதற்கு முழுமையான இடங்கள் எதையும் கொண்டிருக்கவில்லை. அனேகமாக "உபசரிப்பு" என்று இங்கு பேசப்படுவது, பயணம் செய்யும் பரிசுத்தவான்களுக்கு உபசரிப்புக் காண்பித்தலையே குறிப்பதாக இருந்திருக்கலாம்.

(2) "கட்டப்பட்டவர்களை ... நினைத்துக்கொள்ளுங்கள்." மீண்டுமாக இந்த புத்திமதியானது, அனேகமாக பொதுவாகச் சிறைச்சாலையில் உள்ளவர்களைக் கவனித்துக்கொள்ளுதல் என்றிருந்திராது,[1] ஆனால் தங்கள் விசுவாசத்தின் நிமித்தம் சிறையில் அடைக்கப்பட்ட கிறிஸ்தவர்களைக் கவனித்துக்கொள்ளுதல்

பற்றியதாக இருந்திருக்கும்.

நாமும்கூட. சகோதரர்களை உபசரித்தல் மற்றும் இடர்பாடுள்ள வேளைகளை அனுபவித்துக் கொண்டிருப்பவர்களைக் கவனித்துக்கொள்ளுதல் என்பவற்றினால் நமது அன்பை அவர்களுக்குக் காண்பிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். கிறிஸ்தவ வாழ்வு என்பது அன்பின் வாழ்வாக இருக்கிறது.

## ஒழுக்கமான வாழ்வு

*இரண்டாவது, நன்கு சமானப்படுத்தப்பட்ட வாழ்வு என்பது ஒழுக்கமான வாழ்வாக உள்ளது.* இங்கே காணப்படும் உதாரணம் விவாக பிரமாணங்கள் சம்பந்தப்பட்டதாக இருக்கிறது. எபிரெயர் 13:4ம் வசனம், "விவாகம் யாவருக்குள்ளும் கனமுள்ளதாயும், விவாகமஞ்சம் அசுசிப்படாததாயுமிருப்பதாக; வேசிக்கள்ளரையும் விபசாரக்காரரையும் தேவன் நியாயந்தீர்ப்பார்" என்று கூறுகிறது. கிறிஸ்தவத் திருமணம் என்பது விசேஷித்ததாக உள்ளது என்பது, கிறிஸ்தவ வாழ்வின் பண்புகளில் ஒன்று என்று இவ்வசனம் கருத்துத் தெரிவிக்கிறது!

கிறிஸ்தவத் திருமணம் என்பது கீழாகப் பார்க்கப்படக்கூடிய ஒரு விஷயமாக இருப்பதில்லை; மாறாக இது "கனமுள்ளதாக" இருக்கிறது. திருமணம் முடித்தல் என்பதைக் காட்டிலும் கன்னித்தன்மையில் நிலைத்திருத்தல் என்பது அதிக பரிசுத்தமானதாக உள்ளாகவே இருப்பதில்லை. இன்றைய நாட்களில் திருமணம் என்ற நிறுவனம் அடிக்கடி அவமதிப்புச் செய்யப் படுகிறது. ஒரு மாநில பல்கலைக் கழகத்தில் எனது மனைவி, திருமணம் மற்றும் குடும்பம் பற்றிக் கலந்துரையாடப்பட்ட சமூகவியல் வகுப்பு ஒன்றில் இருந்தார். அங்கிருந்த முப்பதுக்கும் சற்றேறக்குறையலானவர்களில், அவர் ஒருவரே, திருமணம் மற்றும் குடும்பம் ஆகியவற்றைப் பற்றி நல்ல விஷயம் எதையாவது கூறக்கூடியவராக இருந்திருந்தார்! உலகம் என்ன நினைத்தாலும், கிறிஸ்தவர்கள் எப்போதும் திருமணத்தைக் கனப்படுத்துபவர்களாக இருக்க வேண்டும்!

குறிப்பாக, உண்மையுள்ள கிறிஸ்தவர்கள் "திருமண மஞ்சத்தை" அசுசிப் படுத்துவதில்லை என்பதால் கிறிஸ்தவத் திருமணம் வேறுபட்டதாக உள்ளது. அவர்கள் ஒழுக்கவீனமான அல்லது விபசார நடத்தையால் குற்றப்படுவதில்லை. ஏன்? ஏனென்றால் பாலுறவுப் பாவங்களினால் குற்றப் படுபவர்களைத் தேவன் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறார் என்பதை அவர்கள் அறிந்துள்ளனர்! விபசாரம் என்பது பாவமாக - தேவனுக்கு எதிரான, மனைவி அல்லது கணவருக்கு எதிரான, மற்றும் யாருடன் விபசாரம் செய்கின்றனரோ அந்த நபருக்கு எதிரான பாவமாக உள்ளது! அப்படிப் பட்ட பாவத்தை நாம் தவிர்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம்! *கிறிஸ்தவ வாழ்வு என்பது தூய்மையான வாழ்வாக உள்ளது!*

## நம்பிக்கை வைத்தலின் வாழ்வு

*மூன்றாவதாக, நன்கு சமானப்படுத்தப்பட்ட வாழ்வு என்பது* - குறிப்பாக, பணம் தொடர்பான விஷயங்களில் - *நம்பிக்கை வைத்தலின் வாழ்வாக உள்ளது.* எபிரெயர் 13:5, 6 வசனங்கள் இருகூருள்ள ஒரு கட்டளையை முன்வைக்கிறது: கிறிஸ்தவர்கள் என்ற வகையில் நாம், நமது வாழ்வைப் பண ஆசையில் இருந்து விடுவிக்கப்பட்ட வாழ்வாகக் காத்துக்கொள்ள வேண்டியுள்ளது மற்றும் நம்மிடத்தில் உள்ளவைகள் போதுமென்று திருப்தியுடன் வாழ

வேண்டிய வாழ்வாக அது உள்ளது. இன்றைய நாட்களில் மக்களால் மிகவும் புறக்கணிக்கப்படும் புதிய ஏற்பாட்டுக் கட்டளை ஒன்றை நான் தேர்ந்து எடுக்க வேண்டும் என்றால், அது இதுவாகத் தான் இருக்கும்! பண ஆசையைப் புறம்பே விலக்கி வைத்தல் என்பதைக் காட்டிலும், நவீன வாழ்விற்கு எதிராகச் செல்லும் விருப்ப நோக்கு வேறு எதுவும் இருப்பதில்லை.

பண ஆசை என்பது எதை அர்த்தப்படுத்துகிறது? பணத்தைக் கொண்டிருத்தல் என்பது தவறானது அல்ல என்பது தெளிவு; இன்றைய நாட்களில் ஏறக்குறைய ஒவ்வொரு சமூகத்திலும் பணம் என்பது வாழ்வதற்கு அத்தியாவசியமான ஒன்றாக உள்ளது. அப்படியென்றால் *பண ஆசை* என்பது என்ன? ஒருவேளை இவ்வசனத்தின் இரண்டாவது பகுதியானது, முதல் பகுதியை நன்கு விளக்கலாம்: பண ஆசை என்பது திருப்தியற்று இருத்தல் என்பதாக உள்ளது; அது இன்னும் இன்னும் வேண்டும் என்று விரும்புதலாக உள்ளது! அது நம்மை விவரிப்பதாக உள்ளதா?

இவ்வசனங்கள், இந்தக் கட்டளைக்குக் கீழ்ப்படிய நமக்கு ஒரு காரணத்தையும் தருகின்றன. நாம் ஏன் பண ஆசை இல்லாதவர்களாக இருக்க வேண்டும்? ஏனென்றால் தேவன் நம்மைக் கவனித்துக் கொள்வதாக வாக்களித்துள்ளார் (13:5ஆ, 6)! நாம் பணத்தின் மீது ஆசை கொண்டால், நாம் திருப்தி இல்லாதவர்களாக இருந்தால், அதிகமான உடைமைகளை அல்லது அதிகமான நிதிநிலைப் பாதுகாப்பை விரும்புபவர்களாக இருந்தால், அது தேவன் மீது நம்பிக்கை வைத்தலில் குறைபாடு ஒன்றைச் சுட்டிக் காண்பிப்பதில்லையா? *கிறிஸ்தவ வாழ்வு என்பது நம்பிக்கை வைத்தலின் வாழ்வாக உள்ளது.*

## சத்தியத்தின் வாழ்வு

*நான்காவதாக, நன்கு சமானப்படுத்தப்பட்ட வாழ்வு என்பது சத்தியத்தின் வாழ்வாக உள்ளது,* விசேஷமாக உபதேச வட்டாரத்தில் சத்தியத்தின் வாழ்வாக உள்ளது. எபிரெயர் 13:7-14ன் போதனையைப் புரிந்துகொள்வதற்கு நாம், முதல் வாசகர்கள் விழுந்து போகுதலின் அபாயத்தில் இருந்தனர் என்பதை உணர்ந்தறிய வேண்டும். அந்த அபாயத்தின் ஒரு பகுதி, கள்ளப் போதகர்கள் இருந்ததில் இருந்து கிளைத்து எழும்பிற்று, ஏனெனில் இவ்விடத்தில் இந்த நிருபம் "பலவிதமான அந்நிய போதனைகள்" பற்றிப் பேசுகிறது (13:9).

இந்தக் கள்ளப்போதகர்கள் எதைப் போதித்துக் கொண்டிருந்தனர்? அவர்களின் உபதேசம் உணவு பற்றிய விஷயங்கள் உள்ளடக்கி இருந்தது என்பது தெளிவு, ஏனெனில் நாம் 9ம் வசனத்தில், இருதயமானது "போஜனபதார்த்தங்களினாலல்ல, கிருபையினாலே இருதயம் ஸ்திரப்படுகிறது நல்லது" என்று வாசிக்கிறோம். 10ம் வசனம், "நமக்கு ஒரு பலிபீடமுண்டு, அதற்குரியவைகளைப் புசிக்கிறதற்குக் கூடாரத்தில் ஆராதனைசெய்கிறவர்களுக்கு அதிகாரமில்லை" என்று கூறுகிறது. இந்தக் கூற்றானது, யூதத்துவத்தைப் போதித்து நடைமுறைப் படுத்தியவர்களுக்கு ஒரு பதிலுரையாக இருந்திருக்க வேண்டும். எனவே சிலர் யூதத்துவத்தை, அதன் உணவுரீதியான பிரமாணங்களுடன் மேம்படுத்திக் கொண்டிருந்தனர், அவர்கள் தங்கள் கள்ளப் போதனைகளைக் கொண்டு பரிசுத்தவான்களைப் புறம்பே வழிநடத்திச் செல்லும் அபாயத்தில் இருந்தனர்.

எபிரெய நிருபத்தின் வாசகர்கள் கள்ளப்போதனையினால்

மயக்கப்படும்படியான சோதனையைத் தாங்கி நிற்க முடிந்தது எவ்வாறு? (1) அவர்கள் தங்களுக்கு தொடக்கத்தில் போதித்து இருந்தவர்களை நினைவில் கொண்டிருக்க வேண்டியிருந்தது (13:7, 8). ஒருவேளை இந்தப் புத்திமதி, அந்த தோற்றகாலப் போதகர்கள் போதித்திருந்தது என்ன என்பதை நினைவில் கொள்ளுதல் அவசியம் என்றும் கருத்துத் தெரிவித்திருக்கலாம். (2) அவர்கள், உணவு அல்ல ஆனால் கிருபையே கிறிஸ்தவர்களை பெலப்படுத்துகிறது என்பதை அறிய வேண்டியவர்களாக இருந்தனர் (13:9). (3) கிறிஸ்துவின் பலி "நகரவாசலுக்குப் புறம்பே" அதாவது (13:12), "யூதத்துவத்திற்கு புறம்பே" செலுத்தப்பட்டது என்பது அவர்களுக்கு நினைவூட்டப்பட்டது. அந்த உண்மையானது, இரட்சிப்பிற்கான கிறிஸ்துவின் ஈவு, தனது பலன்தரும் தன்மைக்கு யூதத்துவத்தைச் சார்ந்திருக்கவில்லை - மற்றும் யூதத்துவத்துடன் தொடர்புடையவர்களாக நிலைத்திருந்தவர்கள் கிறிஸ்துவுக்குள் பங்கு எதையும் பெற்றிருக்கவில்லை என்று அர்த்தப்படுத்திற்று. (4) அவர்கள் தங்களுக்கு "நிலையான நகரம்" இங்கு இல்லை (13:14) என்பதை நினைவில் வைக்க வேண்டியிருந்தது. ஒருவேளை யூதர்கள், "நாங்கள் எங்கள் மார்க்கத்தின் மையமாக பரிசுத்த நகரமான எருசலேமைக் கொண்டிருக்கிறோம். உங்கள் நகரம் எங்கே உள்ளது?" என்று கூறி கிறிஸ்தவர்களைப் பழித்துரைத்து இருக்கலாம். கிறிஸ்தவர்கள், "நாங்கள் இனிவரவிருப்பதும், பரலோகத்தில் நித்தியமானதாக உள்ளதுமான ஒரு மேன்மையான நகரத்தைக் கொண்டிருக்கிறோம்" என்று பதில் அளிக்க முடிந்தது.

சமாதானப்படுத்தப்பட்ட வாழ்விற்கு இவ்வசனப்பகுதி எவ்வாறு நடைமுறைப்படுகிறது? இது கள்ளப்போதனைக்கு எதிராக எச்சரிக்கிறது என்பதால், கள்ளப்போதனை பற்றிக் கவலைப்படாமல், ஒருவர் நன்கு சமானப்படுத்தப்பட்ட வாழ்வை நடத்த முடியாது என்று நாம் முடிவு செய்தாக வேண்டும். நாம் அன்புசெய்கிறவர்களாக, உபகாரம் செய்கிறவர்களாக மற்றும் சுவிசேஷ ஊழியத்துவம் உள்ளவர்களாக இராதிருந்தால், சத்தியத்தைப் போதிப்பது எந்த மதிப்பையும் கொண்டிருப்பதில்லை என்று சிலர் கூறியுள்ளனர் - மற்றும் அது உண்மையாகவே உள்ளது. இருப்பினும், நாம் சத்தியத்தைப் போதிக்காதிருந்தால், அன்பாக இருப்பதும் உபகாரம் செய்வதும் சுவிசேஷ ஊழியத்துவம் கொண்டிருப்பதும் எந்த மதிப்பையும் கொண்டிராது என்பதும் உண்மையாகவே உள்ளது! உபதேசத்தைப் பற்றி நாம் அக்கறை கொண்டிருப்போமாக! *கிறிஸ்தவ வாழ்வு என்பது சத்தியத்திற்குத் தன்னை ஒப்புக்கொடுத்த வாழ்வாக உள்ளது.*

## துதியின் வாழ்வு

*ஐந்தாவதாக, நன்கு சமானப்படுத்தப்பட்ட வாழ்வு என்பது தேவனுக்கு துதி செலுத்தும் வாழ்வாக உள்ளது.* எபிரெயர் 13:14ஐ ஆழ்ந்து சிந்தியுங்கள்: "ஆகையால், அவருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திரபலியை அவர்மூலமாய் எப்போதும் தேவனுக்குச் செலுத்தக்கடவோம்." இவ்வசனம், யூதத்துவ நடைமுறை ஒன்றிற்கு இணையாக, கிறிஸ்தவத்தில் உள்ள வேறொரு நடைமுறையைப் பற்றிப் பேசுகிறது: அது பலிகள். இருப்பினும் ஒரு முக்கியமான வேறுபாடு உள்ளது: யூதர்கள் மிருகங்களின் பலிகளைச் செலுத்தினர், கிறில்தவர்கள் துதியின் பலிகளைச்

செலுத்துகின்றனர்.

கிறிஸ்தவர்களின் துதியின் பலியானது, (அ) தேவனுக்கு (ஆ) நமது உதடுதளினால் (நாம் பாடும்போது) (இ) எப்போதும் செலுத்தப்பட வேண்டியதாக உள்ளது. *கிறிஸ்தவ வாழ்வு என்பது தொடர்ந்து துதி செலுத்தும் வாழ்வாக உள்ளது.*

## கொடுத்தலின் வாழ்வு

*ஆறாவதாக, நன்கு சமானப்படுத்தப்பட்ட வாழ்வு என்பது மற்றவர்களுக்குக் கொடுத்தலின் வாழ்வாக* உள்ளது. 16ம் வசனத்தைக் கண்ணோக்குங்கள்: "அன்றியும் நன்மைசெய்யவும், தானதர்மம்பண்ணவும் மறவாதிருங்கள்; இப்படிப்பட்ட பலிகளின்மேல் தேவன் பிரியமாயிருக்கிறார்." நமது வாழ்வு உண்மையிலேயே கிறிஸ்தவ வாழ்வாக இருந்தால், நாம் தொடர்ந்து நன்மை செய்துகொண்டும் நாம் கொண்டுள்ளவற்றைப் பிறருக்குப் பகிர்ந்து கொடுத்துக் கொண்டும் இருப்போம். மேலும், நன்மை செய்தலும் பிறருக்குக் கொடுத்தலும் தேவனுக்குச் செலுத்தும் கூடுதல் பலிகளாக உள்ளன என்பதையும் கவனியுங்கள். தேவையில் இருப்பவர்களுக்கு உதவுதல் என்பது தேவனுக்குச் செலுத்தப்படும் பலியாக உள்ளது. *கிறிஸ்தவ வாழ்வு என்பது கொடுக்கும் வாழ்வாக உள்ளது.*

## மதிப்பின் வாழ்வு

*ஏழாவதாக, நன்கு சமானப்படுத்தப்பட்ட வாழ்வு என்பது நமது நடத்துனர்களை மதிக்கும் வாழ்வாக* உள்ளது. 17ம் வசனம், "உங்களை நடத்துகிறவர்களுக்குக் ... கீழ்ப்படிந்து அடங்குங்கள்" என்று கூறுகிறது. 7ம் வசனத்தில் நடத்துனர்கள் கடந்தகால வினைச்சொல்லில் ("உங்களை நடத்தினவர்களை") குறிப்பிடப்பட்டனர் என்பதைக் கவனியுங்கள்; அவர்கள் தங்கள் பரலோக பலனை அடையும்படி ஏற்கனவே கடந்து சென்றிருந்தனர். இருப்பினும் 17ம் வசனத்தில் பேசப்படும் நடத்துனர்கள், நிகழ்கால வினைச்சொல்லில் பேசப்படுகின்றனர்; அவர்கள் (எபிரெயருக்கு நிருபம் எழுதப்பட்ட வேளையில்) இன்னமும் ஆத்துமாக்களைக் கண்காணிப்பவர்களாக இருந்தனர். அவர்கள் யாராக இருந்தனர்? இது சபைக்குழுமத்தின் மூப்பர்களுக்கான குறிப்பாக இருக்க அதிகம் வாய்ப்புள்ளது. ஆகையால் இவ்வசனம் இரு கருத்துக்களைப் போதிக்கிறது:

(1) *மூப்பர்களின் பொறுப்பு:* சபைக்குழுமத்தில் உள்ள ஆத்துமாக்களை "கண்காணித்தல்" என்பது அவர்களின் பணியாக உள்ளது. அவர்கள் வெறுமனே முதலாளிகளாக அல்லது முடிவு எடுப்பவர்களாக இருக்கக்கூடாது; அவர்கள் தங்கள் கவனிப்பின்கீழ் உள்ள ஆத்துமாக்களுக்குப் பொறுப்புக் கொண்டுள்ளனர். என்ன ஒரு பயங்கரமான பொறுப்பு!

(2) *சபைக்குழுமத்திற்கு மூப்பர்களுடனான உறவு:* உறுப்பினர்கள், உள்ளூர் சபை நடத்துனர்களுக்கு "கீழ்ப்படிந்து அடங்க" வேண்டும். வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், மூப்பர்களின் நடத்துவத்தை அவர்கள் சந்தோஷமாகப் பின்பற்ற வேண்டும். மூப்பர்கள் தங்கள் பணியைச் செய்து அவர்களை உறுப்பினர்கள் சந்தோஷமாகப் பின்பற்றும் சபையானது மகிழ்வான சபையாக உள்ளது!

*கீழ்ப்படிதலின் கொள்கையானது, கிறிஸ்தவ வாழ்வில் சபைக்குள்ளும் சபைக்குப் புறம்பேயும் நடைமுறைப் படுத்தப்படுகிறது. கிறிஸ்தவ வாழ்வு என்பது பணிந்திருக்கும் வாழ்வாக உள்ளது.*

## கீழ்ப்படிதலின் வாழ்வு

*எட்டாவதாக, நன்கு சமானப்படுத்தப்பட்ட வாழ்வு என்பது கீழ்ப்படிதலின் வாழ்வாக உள்ளது.* (வாசிக்கவும் எபிரெயர் 13:20, 21.) இந்த நிருபம் (ஒரு சுருக்கமான தனிப்பட்ட செய்திக்குப் பக்கமாக) ஒரு ஜெபத்துடன் முடிகிறது. எழுத்தாளர் தமது வாசகர்களை, தேவன் "தமது சித்தத்தைச் செய்யும்படிக்கு" எல்லா நன்மைகளினாலும் ஆசீர்வதிக்கும்படி கேட்டுக்கொண்டார். அந்த ஜெபமானது நமது வேண்டுகோளாகவும் நமது வாழ்வில் நோக்கமாகவும் இருக்க வேண்டும்: தேவனுடைய சித்தத்தின்படி செய்தல் மற்றும் "அவரது பார்வையில் பிரியமானவற்றை" செயல்படுத்துதல். *எல்லாவற்றிற்கும் மேலாக, கிறிஸ்தவ வாழ்வு என்பது தேவனுடைய சித்தத்தின்படி செய்தல் மற்றும் அவரைப் பிரியப் படுத்துதல் ஆகியவற்றின் கண்ணோட்டத்துடன் வாழப்படுகிறது.*

## முடிவுரை

நீங்கள் எவ்வாறு அளக்கப்படுகிறீர்கள்? உங்கள் வாழ்வு, எபிரெயர் 13ல் சித்தரிக்கப்பட்டுள்ளபடி, நன்கு உருப்படுத்தப்பட்ட மற்றும் நன்கு சமானமாக்கப்பட்ட கிறிஸ்தவ வாழ்வாக உள்ளதா? நாம் எந்தப் பகுதிகளில் பலவீனர்களாக இருக்கிறோம் என்பதை மறுகண்ணோட்டம் இடுதலும் அவற்றை மேம்படுத்தப் பணிசெய்யும்படி தீர்மானித்தலுமே, இதைப்போன்ற பாடத்திற்கு நாம் ஏற்படுத்தக் கூடிய மிகச்சிறந்த பதில் செயலாக உள்ளது.

எடுத்துக்காட்டாக, அன்பில் அதிகமாக கவனம் செலுத்தி சத்தியத்தில் சிறிதளவே கவனம் செலுத்துதல் என்பதல்ல, ஆனால் உலகத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டு கிறிஸ்தவ மதிப்பீடு ஒவ்வொன்றையும் புறக்கணித்து விடுதல் என்பதே கிறிஸ்தவர்கள் எதிர்கொள்ளும் மாபெரும் அபாயமாக உள்ளது. ஆகையால் நாம், நன்கு சமானப்படுத்தப் பட்டிருப்பது பற்றி இன்னும் ஒரு சிந்தனையுடன் இப்பாடத்தை முடிப்போமாக. மக்களில் சிலர் தேவனுக்குத் தங்கள் வாழ்வில் இடம் எதையும் அளிக்காதிருப்பதால், அவர்களின் வாழ்வு, சமானநிலை தவறியுள்ளது. நீங்கள் பரிபூரணமான உடல்நலத்துடன், நிதிநிலை வகையில் செல்வச் செழிப்புடன், சமூகத்தில் நன்கு மேம்பட்ட நிலையுடன் மற்றும் மதிநுட்பமான மேதைத்தனத்தடன் இருக்கலாம் - ஆனால் உங்கள் வாழ்வு கிறிஸ்துவையும் எபிரெயர் 13ல் விவரிக்கப்பட்டுள்ள கிறிஸ்துவைப் போன்ற பண்புகளையும் உள்ளடக்காது இருந்தால், நீங்கள் அத்தியாவசியமான சிலவற்றில் குறைவுபடுகிறீர்கள்.

---

குறிப்பு

[1]சிறைப்பட்டவர்களைக் கவனித்துக்கொள்ளுதல் என்பது ஒரு நல்ல ஊழியமாக உள்ளது, ஆனால் இது இவ்விடத்தின் அர்த்தமாக இராதிருக்கலாம். இன்றைய நாட்களில் பல சபைகள் "சிறைச்சாலை ஊழியத்தில்" செயல்முனைப்புடன் ஈடுபட்டுள்ளன.